புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
ज्ञान-विज्ञान विमुक्तये
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

==========================================================================

# பரணியும் வைணவமும்

==========================================================================

**ஆய்வாளர்**
**முனைவர் மு.நவமணி**
*ஆய்வு நெறியாளர்,*
*தமிழ்த்துறை,*
*தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி,* ***(பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)***
*தருமபுரம்.* **நெறியாளர்**

*சி.கல்பனா*
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
***(பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)****, தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி*
*தருமபுரம்.*

==========================================================================

**முன்னுரை***:*

*சிற்றிலக்கியம் என்பது பிரபந்தம் ஆகும். இது தொண்ணூற்றாறு வகைப்படும். இவற்றில் ஒன்று பரணி ஆகும். பரணி என்பது போர் பற்றிய இலக்கியமாகும். வைணவ சமயம் திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம். இச்சமயம் இந்து சமயத்தின் ஆறு உட்பிரிவுகளுள் ஒன்றாகும். உலகில் தீமைகள் ஓங்கும்போது காக்கும் கடவுளாக திருமால் மனித வடிவில் அவதாரம் எடுத்து நல்லவரைக் காத்து வந்தார். இச்சமயத்திற்குரிய கடவுளை மன்னர்களோடு ஒப்பிடக்கூடிய ஒரு நிலை இருந்தது என்பதை இக்கட்டுரையானது ஆராய்கின்றது.*

**ஆய்வுச்சுருக்கம்***:*

*இலக்கியங்கள் சமூகத்தினை எடுத்துக்காட்டும் கண்ணாடியாகும். சமூக மாற்றத்தினால் இலக்கியங்களும் புது வடிவங்களைப் பெறுகின்றன. அவ்வகையில் சிற்றிலக்கியங்கள் அன்றைய சமூகத்தினைப் பற்றி அறியும் பேரிலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவ்வகையில் போர் குறித்துப் பேசும் பரணி இலக்கியங்கள் தமிழர்களின் போர் நெறிகளை வெளிப்படுத்துகின்றன. போருடன் அன்றைய சமூகத்தில் மக்களின் வாழ்வியலையும் பழக்கவழக்கங்களையும் அறிய பேருதவிபுரிகின்றன. சமூகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் சமயங்கள் குறித்தும் அறிவதற்கு துணைநிற்கின்றன.*

அன்றைய நிலையில் சைவமும் வைணவமும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தன. திருமாலை முழுமுதற் தெய்வமாக வணங்கக்கூடியது வைணவமாகும். வைணவத்தின் அடியவர்கள் ஆழ்வார்கள் என்றழைக்கப்பட்டனர். திருமால் காக்கும் தெய்வமாக விளங்குவதால், மன்னனுடன் ஒப்பிடுகின்றனர். மன்னனைக் காண்பது கடவுளை காண்பதற்கு ஒப்பு என்பது மக்களின் வழக்காகும். தங்களை காத்து நல்வழிப்படுத்துவதும் மன்னனை, இறை என்றே கூறினர். பரணி இலக்கியத்தில் திருமால் குறித்த செய்திகளையும் வைணவத்தின் வழிமுறைகளையும், விளக்குவதே இவ்வாய்வாகும்.

**கலைச்சொற்கள்**

வைணவம், பரணி, திருமால், வீரபத்திரர், தக்கன், சோழன், ஆலமலர் கடவுள், துழாய் மாலை.

**வைணவம்**:

பண்டைத் தமிழர்கள் இயற்கை நிலையில் வாழ்ந்து இயற்கையோடு ஒன்றியிருந்தனர். இயற்கையையே வாழ்வின் முதலாகக் கருதினர். எனவே, சங்க காலத் தமிழர்கள் இயற்கையை வழிபட்டனர். தாம் வாழும் உலகைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நாநிலமாகப் பகுத்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று இயற்கையின் பின்னணியையும் வாழ்வின் உணவு, உணர்ச்சிகளையும் குறித்துக் காட்டினர். அவர்கள் இயற்கையையே கடவுளாக வணங்கினர். ஒவ்வொரு நிலத்திற்கும் முறையே மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்று நான்கு நிலத் தெய்வத்தை இவர்கள் படைத்தனர்.

"இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையிருந்த உறவு பொதுவாக எசமானுக்கும் அடிமைக்கும் இடையிருந்த உறவு போன்றது."[1 (வை.தோ.வ-ப 3)]

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டுவணங்கப்படும் சமயம் வைணவம் ஆகும். வைணவ சமயத்து இறை அடியார்கள் பன்னிருவரும் ஆழ்வார்கள் எனப்படுவர். திருமாலின் அருளில் அன்பில் ஆழ்ந்து தம்மை மறந்தவர்களே ஆழ்வார்கள் எனப்பட்டனர். மக்களிடைச் செல்வாக்குப் பெற்ற வழிபாட்டு முறைகளோடிணைந்த வளர்ச்சிப் போக்கில் உருவான புதிய விஷ்ணு வழிபாடு பக்தி அல்லது இறைவனிடம் அன்பு செலுத்துதல் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது.

**திருமால் வழிபாடு**:

மால் என்கிற சொல்லே திரு என்கிற அடைமொழி பெற்று திருமால் ஆகியது. திரு என்கிற சொல் செல்வத்தின் தலைவியைக் குறிக்கும். அத்தலைவியை உடையவன் திருமால் என்பது உறுதிப்படுகின்றது. திருமால் எனினும் மாயோன் எனினும் ஒருவரையேக்குறிக்கும். இவ்விரு சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர் நெடுமாலின் அருமையையும், பெருமையையும், அன்பையும் வரலாற்றோடு இணைத்துள்ளனர். கண்ணன் என்ற சொல் இருந்த பொழுதும் அச்சொல் நேரடியாகத் திருமாலைக் குறிக்காமல் கரியவன் என்ற பொருளோடு பல புலவர்களுக்குப் பெயராகவும் அமைந்தது. வேதங்களை விட பழமையானது திருமால் வழிபாடு ஆகும்.

பெரிய நிலத்தை அளந்தவன், திருவாகிய மறுவை அணிந்த மார்பினை உடையவன். கடல் போன்ற நிறத்தையுடையவன் என்று இலக்கியங்கள் பாடுபடுகின்றன. இதனை,

"இருநிலங் கடந்த திருமறு மார்பின்

*முந்நீர் வண்ணன்"[2] (பெரும்பாணாற்றுப்படை 29-30 அடி)*

*என்று பெரும்பாணாற்றுப் படை கூறுகின்றது.*

***பரணி***

*அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கையும் உணர்த்தி மக்களை நன்னெறிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் ஆகும். அவற்றும் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து கற்பனை, தெய்வம் போற்றல், தனி மனிதப் போற்றலுக்கு மிகுதியும் இடம் தருவது சிற்றிலக்கியம் ஆகும்.*

*சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும். அவற்றுள் ஒன்று பரணி ஆகும்.*

*பரணி என்பது போரில் வெற்றிப் பெற்ற வீரனை விவரித்துப் பாடுவது பரணியாகும். போர்க்களத்தைப் பாடுவது. மன்னனின் மரபு. மன்னன் பெருமை, மன்னனின் வெற்றியைப் பாடும் இலக்கியம் இது.*

*"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற*

*மாணவனுக்கு வகுப்பது பரணி"[3] (த.இ.வ-ப.376)*

*என்று கூறுகின்றது.*

***பரணியும் வைணவமும்***

*பரணி நூல்களுள் ஒன்று தக்கயாகப்பரணி, கலிங்கத்துபரணி என்ற நூல்களில் வைணவசமயமானது இடம்பெற்றுள்ளது. பரணி என்றாலே மன்னனின் வெற்றி பெருமையானது இடம் பெறும். பொதுவாகவே மன்னர் வழிபாடும் தனித்த நிலையிலேயே மாயோனோடு வைத்து போற்றப்பட்டது.*

*மன்னர்களால் போற்றி புகழும் போது, சங்கச் சான்றோர் அவர்களைத் தொல்காப்பியத்தில் பூவை நிலை என்பர். பூவை என்பது காயாம் பூவைக் குறிக்கும். இதனை,*

*"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்*
*தாவா விழுப்பபுகழ்ப் பூவை நிலையும்"[4] (தொல் பொருள் புறத்திணை நூ-63)*
*என்று குறிப்பிடுகின்றது.*

***திருமாலுக்கு நிகரான சோழன்***

*மகாபாரக் காவியத்தில் முதலில் வருபவனும் மாயங்கள் புரிபவனுமாகிய கண்ணபிரானாகிய திருமால் உண்மைப் பொருளானவன்.ள அவன் படைப்புத் தொழிலில் ஈடுபட்டு உலகங்களும், உலகங்களில் உள்ள உயிர்களும் தோன்றின என்பளதனை,*

*"அதன் முதற்கண் வரும் ஆதிமுதல் மாயன் இவனே*

*அப்ரமேயன் எனும் மெய் பீரியமதாக உடனே"[5] (க.ப-பா-183)*

*என்று கலிங்கத்துப்பரணியில் செயங்கொண்டார் குறிப்பிடுகின்றார்.*

**திருமாலின் திருவந்தி**

*எல்லாவற்றிற்கும் முதன்மையாகிய திருமாலின் மிகத் தூய்மையான உந்தியில் தோன்றிய தாமரை மலரிலிருந்து பிரம்மன் பிறந்தான். அப்பிரமன் மரீசி எனும் பெருமையிற் சிறந்தவனைப் பெற்ற விதத்தையும் செயங்கொண்டார்,*

*"ஆதிமால் அமலநாபி கமலத்து அயன் உதித்து*

*அயன் மரீசி எனும் அண்ணலை அளித்த பரிசும்"*[6 (க.ப-பா-187)]

*குறிப்பிடுகின்றார். மேலும் இதனை கடுவன் இளவெயினார்*

*"வாய்மொழி மகனொடு மலர்ந்த*

*தாமரைப் பொகுட்டு நின் நேமி நிழல"*[7 (393-94)/பரிபாடல்]

*என்று குறிப்பிடுகின்றார்.*

*அரிய மறைகள் உணர்த்தும் நெறிகளை உலகினர்க்கு உணர்த்த நான்முகன் படைத்த உலமாகிய நிலமகளை, உலகங்களைக் காத்து நிற்கும் உரிமையின் காரணமாகக் கைப்பிடித்த சோழர் குலங்களில் உயர்ந்தவனாகிய முதல் குலோத்துங்க சோழன் திருமாலைப் போன்று தன்னை அடைந்தவர்\களைக் காத்தருள்பவனாகிய சோழன் வாழ்க என்பதனை,*

*"அருமறையின் நெறிகாட்ட அயன்பயந்த*

*நிலமகளை, அண்டங் காக்கும்*

*உரிமையினில் கைப்பிடித்த உபயகுலோத்*

*தமன் அபயன் வாழ்க – என்றே"*[8 (க.ப-பா.2)]

*கலிங்கத்துப்பரணி குறிப்பிடுகின்றது.*

**கண்ணன் அவதாரம்**

*தேவர்கள் அனைவரும் தங்கள் குறைகளைச் சொல்லி திருமாலிடம் முறையிட்டதனால் திருமால் எல்லோரினும் உயர்ந்தவரான மூவுலங்களில் உள்ளவர்களும் தன்னை வணங்கும் வண்ணம் தேவகியின் அழகிய வயிற்றில் வசுதேவருக்கு திருமகனாக முன்னொருநாள் அவதாரம் செய்தான். அதைப்போன்று மக்களின் குறைகளைத் தீர்க்க சோழன் வந்து பிறந்தான் இதனை,*

*"தேவர் எலாம் குறை இரைப்பத் தேவகி தன்*

*திரு வயிற்றில் வசுதேவற்கு*

*மூவுலகும் தொழ நெடுமால் முன்னொரு நாள்*

*அவதாரம் செய்த பின்னை"*[9(க.ப-பா.234)]

*என்ற பாடல்வழி அறியமுடிகின்றது.*

**கண்ணனே குலோத்துங்கன்**

உலகில் உள்ள இருள் அனைத்தையும் நீக்குதற்காக இந்திரகுலத்து மன்னனான இராசராச நரேந்திரனது மனைவியும் வெற்றி விளங்கும் சூரியகுல மன்னனான அரசர்களுக்கெல்லாம் அரசனான முதலாம் இராஜேந்திரசோழனது அருள் பெற்ற திருமகளான அம்மங்கை தேவியின் அழகிய வயிற்றிலே ஆலிலையில் பள்ளிகொண்ட அக்கண்ணனே, குலோத்துங்க சோழனாக அவதரித்தான். இதனை,

"இருள் முழுதும் அகற்றும் விதுகுலத்தோன் தேவி

இகல்விளங்கு தபனகுலத்து இராசராசன்

அருள் திருவின் திருவயிற்றில் வந்து தோன்றி

ஆல்இலையில் அவதரித்தான் அவனே, மீள"[10 (க.ப-பா.235)]

என்ற பாடலானது குறிப்பிடுகின்றது. மேலும்

"ஆலமலர் கடவுள்"[11 (புறம்- 198:9)]

அதாவது ஆலிலையின் மேல் மேவிய திருமால் எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

**திருமாலின் திருமார்பு**

பாற்கடலின் அலைகள் வருணனுடைய மார்பின் மாலைகளைப் போன்று தோற்றமளிக்க, முன்பொரு சமயம் மந்தார மலையினை மத்தாகக் கொண்டு பாற்கடைலைக் கடைந்த சூழலில் அப்போது சிவந்த குழம்பு தோன்றியதோ என்று கண்டவர் வியந்திடும் வகையில் தோன்றிய கவுத்துவ மணிமாலையினைத் தம்முடைய மார்பினில் திருமால் அணிந்திருந்தார். என்பதனை

செங்கலங்க பரந்தெனப் பாற்கடல்

சேப்ப வந்த கவுத்துவஞ் சேர்த்தியே[12 (த.ப.பா.277)]

மேலும் திருமகள் தங்கும் திருமாலின் திருமாலின் மார்பினை வழிபட்டு வணங்குவோரை விழுமிய துறக்கங்களின் இன்பத்தினைப் பெறுவர், இதனை,

"அல்லியந் திருமறு மார்ப நீ அருளல் வேண்டும்"[13 (பரிபாடல் திருமால்-1 பா)]

என்று பரிபாடலானது குறிப்பிடுகின்றது.

**திருமுடி**

ஆயிரம் தலைகளை உடையவனான ஆதிசேடன் கிடக்க, நடுவில் நீண்ட முடியோடு திருமால் காட்சி அளித்த தோற்றமானது, கொப்பூழ்க் கொடியான தாமரையினை போன்று இருந்ததனை,

"திறத்து மாலைத் திருமுடிப் பக்கமே

சென்ற கன்ற பணங்களுஞ் சேடனும்"[14(த.ப-பா-282)]

என்று தக்கயாகப் பரணியானது குறிப்பிடுகின்றது. மேலும்

"ஆயிரம் தலையுடைய ஆதிசேடன் சீற்ற நோக்கோடு திருமாலின் தலைக்கு ஊறு வராது காக்கின்றது. கதிரொளி படர்ந்த மலைக் குவடு போன்றும், வேங்கை மலர்ந்த

*குன்றம் போன்றும் திருமாலின் பொன்முடி மிளிர்கின்றது."[15] என்று செந்தமிழ் இலக்கியத்தில் திருமால் என்ற நூலானது குறிப்பிடுகின்றது.*

**திருவடி**

*ஒரு சமயம் திருமால் வாமனன் என்னும் குறுகிய வடிவம் கொண்டு மாவலியிடம் வந்து மூன்றடி நிலம் கேட்டுப் பின்னர் வானம் தொட்ட வடிவமான திரிவிக்ரமனாய் வளர்ந்து நின்றார் என்பதனை,*

*"பூத மும்பழைய வாமனன் வளர்ந்ததனையும்*
*புடைபெயர்ந்தெழ வளர்ந்து பெயர் போன கழுதின்"[16 (த.ப-பா-406)]*

*தக்கயாகப் பரணி குறிப்பிடுகின்றது. இதைப்போன்று திருமால் திருவடித் தாமரையால் இஞ்ஞாலம் முழுவதையும் அளந்துள்ளார். என்பதனை,*

*"கீழேழு உலகமும் உற்ற அடியினை"[17 (செ.இ.தி-ப.21)]*

*செந்தமிழ் இலக்கியங்களில் திருமால் என்ற நூலானது குறிப்பிடுகின்றது.*

***திருமாலின் போர் (அ) கண்***

*சிவந்த கண்களில் கோபத்தில் வெளிப்பட, திருமால் தம்முடைய பாற்கடலை நோக்கி வீரபத்திரர் மேல் சென்று தாக்கு என்று கூறினார். இதனைக் கேட்ட பாற்கடலும் சென்றது. அதன் நீரில் பரசு என்பதான ஆயுதத்தினையுடைய வீரபத்திரரின் சடையில் உள்ள பாம்புகளில் ஒன்றினுடைய நாக்கு மட்டும் சிறிதளவு நனைந்தது. இதனை,*

*"சேய கண்கனன் முராரி தங்கள்கடல்*
*செல்க வென்னவது சென்றதால்"[18 (த.ப-பா.644)]*

*என்று குறிப்பிடுகின்றது. மேலும், திருமாலைப்பாடிய புலவர்கள் எல்லாருமே அவர் கண்களுக்கு தாமரை மலரையே உவமை கூறியுள்ளனர். எஞ்ஞான்றும் இயல்பாகவே சிவந்திருத்தலின் இவர் கண்கள் செறாஅச் செங்கண் என்றும் செயிர் தீர் செங்கண் என்றும் பாராட்டப் பெற்றுள்ளான் என்று கூறுகின்றது.*

**திருமாலுக்கும் வீரபத்திர தேவருக்கும் யுத்தம்**

*திருமால் தன்னுடைய ஒற்றைச் சங்கினை எடுத்து ஊதி ஒலி எழுப்பினார். வீரர் படைகளோ முன்னர் அளவற்ற திருமால்களாக உருவம் கொண்டு வந்தவர்களிடமிருந்து பறித்த அனைத்து சங்குகளையும் எடுத்து இடைவிடாமல் ஊதினார்கள். திருமாலும் வீரபத்திரரும் ஒருவருடன் ஒருவர் ஒன்றாக மோதத் துவங்கியதும் சக்கரவாள மலையானது பிளந்து கொண்டது. இடையில் நின்ற மேருமலை உட்பட அனைத்து மலைகளும் கடல்களும், அந்த ஒலியினை எதிரொலித்தன. விண்மீன் கூட்டங்கள் உதிர்ந்து விழுந்தன. இதனை,*

*"நேமி யங்கிரி தெரிந்தது முரிந்ததிடையே*
*நின்ற மேருகிரி யெக்கிரியு மெக்கடலுநேர்"[19 (த.ப-பா.705)]*

*என்று கூறுகின்றது.*

**திருமால் வருகை**

*ஆகாயத்தினையே முட்டும் பழைமை உடைய அண்ட கோளங்களையும், பழைய மேரு மலையினையும் சேர்த்து உருக்கிப் பெருந்தகடு செய்ததனைப் போன்ற ஒளிவீசும் பொன் ஆடைகளை அணிந்தவனாகத் திருமால் வந்தார். என்பதனை,*

"தகடு செய்து கொண்டப்பமு மிட்டன
சாத்தும் மீதகவாடை தயங்கவே"[20 (த.ப-பா.276)]
என்ற பாடலடியானது உணர்த்துகின்றது.

காலையில் உதித்திடக் கூடிய சிவந்த சூரியன் முதலான தாமரைக்காடு போன்ற திருமாலினுடைய மணம் வீசும் துளசி மாலையானது, சூரிய முடியினைச் சுற்றி வந்தால் தம்முடைய ஒளி மழுங்கி விடும் என்று கருதி, மேரு மலையை வலம் வந்தன. என்பதை

"காலை சூழ்செங் கதிர்முத லாயின
கமலக் காடன்ன கண்ணன் கமழ்துழாய்"[21 (த.பா.பா.279)]
என்று ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகின்றார்.

இதனை மதுரைக்காஞ்சியானது,

"பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறும்"[22 (மதுரைக்காஞ்சி 548.7)]

என்று கூறுகின்றது.

நாட்டு வேந்தனை வாழ்த்தும் இடத்தும் திருமால்போல் திகழ்க என்று மனமாரப் போற்றும் மக்களின் பக்திப் பெருக்கினை,

"அரும்பொருள் மரபின்பால் யாழ்கேளாக் கிடந்தான
பெருங்கடல் துயில்கொள்ளும்"[23 (கலி.பா-121)]
என்று கலித்தொகையானது குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

பரணி இலக்கியத்தில் வைணவ சமயக் கடவுளான திருமாலின் திருவுருவம், திருமுடி, திருமார்பு, திருக்கண் போன்ற செய்திகள் அமைந்துள்ளன. பொதுவாகவே மன்னன் என்பவன் மக்களைக் காக்கக் கூடியவன். முழுமுதற் கடவுளாகவும், காக்கும் கடவுளாகவும் இருக்கக்கூடிய திருமாலை ஒரு மன்னனோடு ஒப்பிட்டு சொல்லக் கூடிய ஒரு பாங்கு இருந்து வந்துள்ளமையே இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.


| | | |
|---|---|---|
| 1 | இராமமூர்த்தி.முத்து | கலிங்கத்துப்பரணி, சாரதா பதிப்பகம் சென்னை-14, மு.ப.2016 |
| 2 | இளம்பூரணர் | தொல்காப்பியம் பொருளதிகாரம்,சாரதா பதிப்பகம் 6/16 தோப்பு வெங்கடாசலம் தெரு திருவல்லிக்கேனி, சென்னை – 600005 மு.ப.2005 |
| 3 | .கமலாமுருகன்.கே.இரா | தக்கயாகப்பரணி கௌராபதிப்பகம் சென்னை – 14 மு.ப.2016 |
| 4 | சுப்பிரமணியன்.ச.வே. | கலித்தொகை, மெய்யப்பன் பதிப்பகம் 53 புதுத்தெரு, சிதம்பரம் 608001 மு.ப.2009 |
| 5 | சுப்ரமணியன் ச.வே. | பரிபாடல் மெய்யப்பன் பதிப்பகம் 53 புதுத்தெரு, சிதம்பரம் 608001 மு.ப.2009 |
| 6 | சுப்ரமணியன் ச.வே. | புறநானூறு மெய்யப்பன் பதிப்பகம் 53 புதுத்தெரு, சிதம்பரம் 608001 மு.ப.2009 |
| 7 | சுப்ரமணியன் .ச.வே. | பெரும்பாணாற்றுப்படை மெய்யப்பன் பதிப்பகம் 53 புதுத்தெரு, சிதம்பரம் 608001 மு.ப.2009 |
| 8 | பாக்கியமேரி | தமிழ் இலக்கிய வரலாறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், பதிப்பு 2011 |
| 9 | ஜெகத்ரட்சகன்.டா.எஸ். | செந்தமிழ் இலக்கியத்தில் திருமால், 29 திலக்தெரு, தியாகராய நகர், சென்னை 600 017, மு.ப.1994 |
| 10 | ஜெயஸ்வால் சுவீரா | வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை- 600 014, மு.ப.1991 |